பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
25 06 2025 7 15
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் சுமார் 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுரங்கப்பாதை திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

2. பீஹார் மாநிலத்தில் விரைவில் புதிய அணுமின் நிலையம் அமைக்கப்பட உள்ளதாக மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

3. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகள் இரட்டை நிலைப்பாட்டைக் கைவிட வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

4. இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்டோர் பயணம் செய்யும் **Axiom-4** விண்கலம் இன்று பிற்பகல் மணி 12. 01க்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

5. புவனேஸ்வரில் நடைபெற்ற தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் கர்நாடகாவின் **Rujula** புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாட்டின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக அடுத்த 10 ஆண்டுகளில் சுமார் 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுரங்கப்பாதை திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளதாக மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புனேயில் நடைபெற்ற ‘மேம்பட்ட வாழ்க்கைக்கு நிலையான சுரங்கப் பாதை’ என்ற கருத்தரங்கில் பேசிய அவர், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பொற்காலத்தில் இந்தியா அடியெடுத்து வைத்துள்ளதாக கூறினார்.

போக்குவரத்து இணைப்பு, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையில் சுரங்கப் பாதைகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்டுமானப் பணியின் தரத்தில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளாமல் செலவைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக டீசலுக்கு மாற்றாக எரிவாயு, எத்தனால், ஹைட்ரஜன் போன்ற மாற்று எரிபொருட்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது தவிர்க்க இயலாதது என்றும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

முப்படைகளின் செயல்பாடுகளை நவீனப்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், அவற்றுக்கான கூட்டு அறிவுரைகளை, முப்படைகளின் தளபதி மற்றும் ராணுவ விவகாரங்கள் துறை செயலாளரே வழங்குவதற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த முடிவு, பாதுகாப்புத்துறை செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு 2 அல்லது அதற்கு மேற்பட்ட படைப்பிரிவுகளுக்கான உத்தரவுகள் தனித்தனியாக பிறப்பிக்கப்பட்டு வந்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதனை மாற்றி ஒரே உத்தரவு பிறப்பிப்பதன் மூலம் நடைமுறைகள் நெறிமுறைப்படுத்தப்படுவதோடு பணிநீக்கம் தவிர்க்கப்பட்டு படைகள் இடையேயான ஒத்துழைப்பு அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகள் இரட்டை நிலைப்பாட்டைக் கைவிட வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கேட்டுக்கொண்டுள்ளார்.

பீஜிங்கில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய அவர், தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிப்போருக்கு எதிராக உறுதியான நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்று வலியுறுத்தினார்.

ஐ.நா. சபையால் தீவிரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்ட லஷ்கரே தொய்பா, ஜெய்ஷே முகமது, அல்காய்தா, ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் இவற்றின் துணை அமைப்புகளுக்கு பாகிஸ்தான் அரசு அளித்து வரும் ஆதரவால் பெரும் அச்சுறுத்தல் நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எல்லைதாண்டிய பயங்கரவாதம் உள்ளிட்ட தீவிரவாத செயல்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாக கருதப்பட்டு, தீவிரவாத அமைப்புகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளித்து நிதியுதவி அளிப்போரை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் திரு. அஜித் தோவல் வலியுறுத்தினார்.

<<<>>>

நாட்டில் மிசா எனப்படும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகிறது.

இந்நாள் அரசியல் சாசன படுகொலை தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

1975ஆம் ஆண்டு இதே நாளில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அவசர நிலையை அறிவித்ததன் மூலம் அரசியல் சாசனம் சீர்குலைக்கப்பட்டதை நினைவுகூறும் விதமாக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

மேலும் அவசர நிலை காலத்தில் காவல்துறையினரின் அத்துமீறலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் உட்கட்சியில் ஏற்பட்ட எதிர்ப்பை முறியடிக்கும் வகையில் இந்திரா காந்தியால் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த காலகட்டத்தில் நீதிமன்ற உத்தரவுகளை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக அரசியல் சாசன திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பான மன் கி பாத் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, அவசர நிலை காலம் இந்திய வரலாற்றில் ஒரு இருண்ட அத்தியாயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் நாடு முழுவதும் சுமார் ஒரு கோடியே 7 லட்சத்திற்கும் அதிகமான கட்டாய கருத்தடை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சுமார் 26 ஆயிரத்திற்கும் அதிகமான அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வும் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

<<<>>>

பீஹார் மாநிலத்தில் விரைவில் புதிய அணுமின் நிலையம் அமைக்கப்பட உள்ளதாக மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார்.

பட்னாவில் நடைபெற்ற மண்டல அளவிலான எரிசக்தி துறை அமைச்சர்கள் மாநாட்டில் பேசிய அவர், மத்திய அரசின் அதிகாரபூர்வ ஒப்புதல் கிடைத்ததும் இதற்கான பணிகள் தொடங்கும் என்றார்.

பீஹார் உட்பட 6 மாநிலங்களில் நவீன தொழில்நுட்பத்திலான சிறிய ரக அணு உலைகள் அமைக்கப்பட இருப்பதாகவும், இந்த அணு உலைகள் பாதுகாப்பான மின்சார உற்பத்திக்கு உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

புதைபடிம எரிபொருள் சார்ந்த மின் உற்பத்தியைக் குறைத்து நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதே மத்திய அரசின் நோக்கம் என்றும் திரு. மனோகர்லால் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்டோர் பயணம் செய்யும் **Axiom-4** விண்கலம் இன்று பிற்பகல் மணி 12. 01க்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி தளத்தில் இருந்து இந்த விண்கலம் செலுத்தப்பட உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

விண்கலம் செலுத்தப்பட்டதில் இருந்து 28 மணி நேரம் கழித்து நாளை பிற்பகல் நாலரை மணியளவில் இந்த விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, அமெரிக்கா, போலந்து மற்றும் ஹங்கேரியைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்களும் 14 நாட்கள் விண்வெளியில் தங்கி ஆய்வு மேற்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நவீன தொழில்நுட்பம் வாயிலாக நிலக்கரி எடுத்துச் செல்வது கணிசமாக அதிகரித்துள்ளது என ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புதுதில்லியில் நேற்று நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி ஆகியோர் கலந்துகொண்டு நிலக்கரி போக்குவரத்தை சிக்கனமான முறையில் எடுத்துச் செல்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

அப்போது வழக்கமான முறைகளில் அல்லாமல் எந்திரங்கள் மூலம் நிலக்கரி எடுத்துச் செல்வதற்கான கட்டமைப்பு வசதியை விரைவுபடுத்த முடிவு செய்யப்பட்டதாகவும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய முறையில் நிலக்கரி எடுத்துச் செல்வதன் மூலம் அனல் மின் நிலையங்களில் 25 நாட்கள் மின் உற்பத்தி செய்வதற்கு தேவையான நிலக்கரி கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கங்கை நதி மாசுபடாமல் பாதுகாக்கும் வகையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்வது அவசியம் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், கட்டமைப்பு சேவையில் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கான அரசின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார்.

மேலும் தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கத்தின் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த திரு. சி.ஆர். பாட்டீல், இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

அகமதாபாதில் விபத்திற்குள்ளான ஏர் இந்தியா விமானத்தின் கருப்புப் பெட்டி வெளிநாட்டிற்கு அனுப்பப்படவில்லை என்று சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

புனேயில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கருப்புப் பெட்டி உள்நாட்டிலேயே ஆய்வு செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

முன்னதாக மாநாடு ஒன்றை தொடங்கி வைத்துப் பேசிய அவர், சிறிய ரக விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் தொலைதூரப் பகுதிக்கான போக்குவரத்து வசதியை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

2047ஆம் ஆண்டுக்குள் விமானப் போக்குவரத்து சேவைலய பெருமளவு விரிவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

புவனேஸ்வரில் நடைபெற்ற தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் கர்நாடகாவின் **Rujula** புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் **Rujula** 26 புள்ளி மூன்று ஆறு வினாடிகளில் நீந்தி இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

மகளிர் ஆயிரத்து 500 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் **Bhavya Sachdeva** தங்கப்பதக்கம் வென்றார்.

ஒடிசாவின் சிருஷ்டி உபாத்யாயா வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் 400 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் ஆர்யன் நெஹ்ரா தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதே பிரிவில் **Kushagra Rawat** வெள்ளிப் பதக்கதையும், **Aneesh Gowda** வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

தமிழகத்தின் ஸ்ரீஹரி நட்ராஜ் மற்றும் சஜ்ஜன் பிரகாஷ் ஆகியோர் 400 மீட்டர் தொடர் போட்டியில் புதிய சாதனை படைத்துள்ளனர்.

<<<<>>>>

செக் குடியரசில் நடைபெற்ற **Ostrava Golden Spike 2025** தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் அவர் 85 புள்ளி இரண்டு ஒன்பது மீட்டர் தொலைவுக்கு ஈட்டி எறிந்து பட்டத்தை வென்றார்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

2027ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு ஆயத்தமாகும் வகையில் மேகாலயாவைச் சேர்ந்த 26 விளையாட்டு அமைப்புகளுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. கான்ராட் சங்மா, சுமார் 39 கோடி ரூபாய் நிதியுதவியை வழங்கியுள்ளார்.

**<<<<The End>>>>**